ஊசி பொருத்தப்பட்டிருப்பதன் விளைவாக மார்பு வலி ஏற்படுகிறது என்றும், ஓரிரு நாட்களில் மார்புவலி நின்றுவிடும் என்றும் கூறு கிருர்கள். உணவு திரவப் பதார்த்தமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று நண்பகலுக்குப் பிறகு நல்ல உறக்கம் கொண்டார்கள். மாலையிலும் இரவிலும் திரவ உணவு உட்கொண்டார்கள்.

நேற்று இரவுப்பொழுதை நல்ல உறக்கத்தோடு அமைதியாகக் கழித்தார்கள். இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, உஷ்ணநிலை எல்லாம் சீரான நிலைமையில் இருந்து வருகின்றன என்று டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

இன்று காலை அவர்கள் உடல்நலம் சீர்பெற்ற நிலையில் இருக்கிறது.

2. தகவல் கோருதல்—தொடர்ச்சி.

(இ) பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு சம்பவம்பற்றி விளக்கம் கோருதல்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நேற்று இந்தச் சட்டசபை எல்லைக்குள் நடந்திருக்கக்கூடிய ஒரு சம்பவத்தைப்பற்றித் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுபற்றி நோட்டீஸ் கொடுக்காகிலேயே உறுப்பினரவர்கள் இந்த இடத்திலே எழுந்து பேசுவது முறையாக இருக்காது.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, நான் அனுமதி கேட்பதற்காகத்தான் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோதண்டராமன் அவர்கள் நேற்று நிகழ்ச்சியைப்பற்றிப் பேச இப்பொழுது எழுந்து நிற்கிருர்கள். நான் அதற்குத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறேன். எந்தப் பிரச்சினையையும் பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் நீங்கள் எழுப்பக்கூடாது. அதையே மீண்டும் பேசுவதற்கு அனுமதி அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அனுமதி கேட்டுப் பேச வேண்டியதுதான். அதைத்தான் தங்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு முன்பே அறிவிக்கை கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். இப்பொழுது நீங்கள் எதற்காக எழுந்து பேசப் போகிறீர்கள் என்பது தெரியாமல் நான் உங்களுக்குப் பேச வாய்ப்பு அளிப்பது முறையாக இருக்காது.